LIBRARY
22 DEC 2016
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013/2014 (May/June 2016)

## GYS 3143 Agricultural Geography

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

1. அ. விவசாய நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் காரணிகளைப் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

   ஆ. விவசாய நடவடிக்கைகளை நிர்ணயிப்பதில் பௌதீகக் காரணிகள் பெறும் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக. (20 புள்ளிகள்)

2. அ. உணவுப் பாதுகாப்பு என்பதனை வரையறை செய்க. (03 புள்ளிகள்)

   ஆ. உலக உணவு உற்பத்தி போக்கில் ஏற்பட்டு வரும் முக்கிய மாற்றங்களை தரவுகளின் துணையுடன் விபரிக்குக. (10 புள்ளிகள்)

   இ. இலங்கையில் உணவுப்பாதுகாப்பு எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் இடரீதியான வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி விபரிக்குக. (12 புள்ளிகள்)

3. அ. டாவென்ற் விற்றல்சே (Darwent Whittlesey) என்பவரால் பாகுபடுத்தப்பட்டுள்ள விவசாய முறைகளைக் (Agricultural System) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   ஆ. இடைவெப்ப வலய பயிர்ச்செய்கை முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஏதாவது இரு பயிர்ச்செய்கை முறைகள் தொடர்பாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

   இ. பெயர்ச்சிப் பயிர்ச் செய்கை முறையின் தனித்துவமான பண்புகளைக் குறிப்பிட்டு, அப்பயிர்ச் செய்கை முறையின் மூலம் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் தொடர்பாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

4. அ. வொன்தியூனனின் (Von Thunen) விவசாய இடவமைவுக் கோட்பாட்டிற்கான எடுகோள்கள் யாவை? (0.5 x 6 = 03 புள்ளிகள்)

ஆ. வொன்தியூனன் விவசாய வலயங்களை எவ்வாறு பிரித்துள்ளார் என்பதனை வரைபடத்தினூடாக விளக்குக. (08 புள்ளிகள்)

இ. கீழே தரப்படும் இரு நிலப்பயன்பாட்டு அம்சங்களையும் பயன்படுத்தி (கற்பன்ன சார் தரவுகள்) வொன்தியூனனின் கணித ரீதியான சமன்பாட்டினடிப்படையில் தூரம், வருமானம், எல்லை என்பவற்றினை கணித்து வரைபடத்தில் வரைந்து காட்டுக. (14 புள்ளிகள்)

<table>
<tr><th colspan="2">நிலப்பயன்பாட்டு அம்சம்</th><th>பெருந்தோட்டம்</th><th>மரக்கறி</th></tr>
<tr><td rowspan="2">ஹெக்ரேயர் ஒன்றிற்கு தேவையான உள்ளீடு</td><td>ஊழியம் (மனித மணி)</td><td>35</td><td>25</td></tr>
<tr><td>உரம் (Kg)</td><td>100</td><td>120</td></tr>
<tr><td colspan="2">ஹெக்ரேயர் ஒன்றிற்கான உற்பத்தியளவு</td><td>1000</td><td>100</td></tr>
<tr><td colspan="2">உற்பத்தி அலகு ஒன்றிற்கான விற்பன்னை விலை</td><td>10</td><td>50</td></tr>
<tr><td colspan="2">போக்குவரத்து செலவு</td><td>0.08</td><td>0.20</td></tr>
<tr><td colspan="4">ஊழியத்திற்கான கொடுப்பனவு (மனித்தியாலத்திற்கு) – 20 ரூபாய்<br>1Kg உரத்திற்கான செலவு – 15 ரூபாய்</td></tr>
</table>

5. "பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்புக்களில் உள்வாங்கப்பட்டுள்ள நவீனத்துவங்களால் மனித ஆரோக்கியம் மற்றும் சூழலின் தரம் என்பவற்றுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றன" இக் கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களுடன் நியாயப்படுத்துக. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

அ. இலங்கையின் விவசாய விருத்திக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் பங்களிப்புக்கள்.

ஆ. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு

இ. விவசாய விருத்தி படிமுறைகளும் தற்கால புரட்சியும்

(12½ x 2 = 25 புள்ளிகள்)